இயந்திரம் அமைத்து விரிவாக்கம் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கும்பகோணம் பகுதியில் தீவிர பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.3 கோடியே 67 இலட்சம் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டு விரிவாக்கப் பணி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று கும்பகோணம் பகுதியில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்கெனவே நிலுவையில் இருந்த தொகைகளையெல்லாம் நீக்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுமூலம் ரூ.7 கோடியே 6 இலட்சம் அளவிற்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்ல அங்கு பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வலுவூட்டும் ஆதாரத் திட்டத்தின்கீழ் ரூ.32 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

127—

கால்நடை மருத்துவமனை

***22671—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூர் வட்டம், சாமாண்டஹள்ளி. ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 14]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, சாமாண்டஹள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். சாமாண்டஹள்ளி ஊராட்சியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கால்நடைத் துறை விதிகளுக்கு ஏற்ப 3,000 அலகுக்கும் அதிகமாக கால்நடைகள் இருப்பதால், அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாமாண்டஹள்ளி ஊராட்சியில், ஏறக்குறைய 8 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள மொரப்பூர் சென்றால் மட்டுமே அப்பகுதி மக்கள் கால்நடை மருத்துவமனையை அணுக முடியும். சாமாண்டஹள்ளி, தொட்டம்பட்டி, பெரியார்நகர், சாமாண்டஹள்ளி புதூர், பொன்னாகந்தம்பட்டி, முல்லைநகர் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல 2,000-க்கும் மேற்பட்ட கால்நடைகளும், ஆடுகளும் உள்ளன. அதுபோல, வெள்ளாளம்பட்டி, எலவடை உள்ளிட்ட கிராமப் பஞ்சாயத்தைச் சார்ந்தவர்களும் இந்த மையப் பகுதிக்கு வந்துதான் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கிற ஒரு நிலைமை இருக்கிறது. கூடிய விரைவில் தமிழக அரசின் உத்தரவைப்பெற்று அந்தப் பகுதியிலே புதிய கால்நடை மருத்துவமனையைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல், ஏற்கெனவே நரிப்பள்ளி, வடுகப்பட்டி, சட்டப்பட்டி பகுதிகளிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே அங்கு புதிய கால்நடை மருத்துவமனை தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அது இந்த ஆண்டாவது தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கால்நடைக் கிளை நிலையங்கள் புதிதாக அமைக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விரைவாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூரில் கால்நடைத் துறையின் சார்பாக துணை இயக்குநர் அலுவலகம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டது. உண்மையிலேயே அரூர் தொகுதி மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஆனால், அதற்குரிய கட்டடம், அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட கட்டமைப்புப் பணிகள் எதுவுமே இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. ஏற்கெனவே இருந்த இடத்திலேயே அலுவலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, கால்நடைத் துறையின் துணை இயக்குநர் அலுவலகம் கட்டுவதற்கும், அதற்குரிய அதிகாரிகளை, மருத்துவர்களை நியமிப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்றும், அதனை இந்த ஆண்டு முதல் கொண்டு வருவதற்கு உத்தரவிடுவார்களா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு புதிய கட்டடங்கள் கட்ட ஏற்கெனவே ரூ.80.25 கோடி அளவிற்கு நிதியினை ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய துணை இயக்குநர் அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, இந்த ஆண்டு, ஒதுக்கப்பட்ட நிதியிலேயே கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*